செ.வெ.எண்.366 நாள் 01.06.2010

**செய்தி வெளியீடு – 1.5.2010**

# மறைந்த பத்திரிகையாளர் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழகத்தில் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருவோரின் நலன் கருதி, அவர்கள் பணியாற்றும் காலத்தில் இறந்துவிடுவார்களேயானால், ,அவர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 2 இலட்ச ரூபாயும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒன்றரை இலட்ச ரூபாயும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒரு இலட்ச ரூபாயும் பத்திரிகையாளர் குடும்ப நல நிதியுதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடும் புதிய திட்டம், 19.9.2006 முதல் இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, சென்னையிலிருந்து வெளிவரும் 'தி முசல்மான்' என்ற உருது நாளிதழில் ஆசிரியராக 51 ஆண்டுகள் பணியாற்றி, 26.4.2008 அன்று இயற்கை எய்திய திரு சையத் ஃபசுல்லா என்பவரின் மனைவி திருமதி சுல்தானி பேகம் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயை பத்திரிகையாளர் குடும்ப நலநிதி உதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று ( 1.5.2010) ஆணையிட்டுள்ளார்.

****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9